அலகு 7

# தொழில் முனைவு

B15N4E



## கற்றலின் நோக்கங்கள்

- தொழில் முனைவுப் பற்றிய பல்வேறு வரையறைகளைப் பற்றி அறிந்துக் கொள்ளுதல்.
- தொழில் முனைவோரின் பண்புகள், முக்கியத்துவம், பணிகள் பற்றி புரிந்துக் கொள்ளுதல்.
- சிறு தொழில் தொடங்குவதற்கான படிநிலைகள் பற்றி தன் அறிவை வளர்த்துக் கொள்ளுதல்.
- குடிசைத் தொழிலின் பாரம்பரிய உணவு தயாரிக்கும் திறனை வளர்த்துக் கொள்ளுதல்.

## 7.1 முன்னுரை

கடந்த பத்தாண்டுகளாக தொழில் வளர்ச்சியானது வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் பொருளாதார முக்கியத்துவம் பெற்றுள்ளது. தொழில் முனைவு என்பது தனி நபர்கள் அல்லது குழுவினர்கள் சந்தையில் உள்ள தேவையான வளங்களைப் பயன்படுத்தி நீண்ட கால ஆதாயத்திற்காக வாய்ப்புகளை ஏற்படுத்துவதற்கான செயல் முறையாகும். இந்த செயல்முறை மூலதன உருவாக்கம் மற்றும் நாட்டின் வருமானத்தை உருவாக்குவதற்காக முறையான திட்டமிடல், மற்றும் முன்கணிப்பு போன்றவை தேவைப்படுகிறது. இது வேலையின்மை மற்றும் வறுமையை குறைக்க வழிவகுக்க உதவுகிறது. சமீப காலத்தில் உலகம் முழுவதும் உள்ள பல்லாயிரக்கணக்கான தனிநபர்களின் நம்பிக்கை மற்றும் கனவுகளாக தொழில் முனைவு மாறியுள்ளது.



XII Std - Home Science TM_Unit 7.indd 203 20-04-2020 6.26.46 PM

## 7.2 தொழில் முனைவின் பொருள்

தொழில் முனைவு என்ற வார்த்தை **'எண்டிரிபென்டர்'** பிரெஞ்சு மொழி சொல்லிலிருந்து பெறப்பட்டது. இதற்கு **'மேற்கொண்டு'** என்று பொருள். இன்று மக்கள் அதை பல்வேறு பெயர்களால் அழைக்கிறார்கள். எ.கா. **சாகசம், சவால் எடுத்தல், புதுமைகள்** போன்றவைகளாகும்.

### தொழில் முனைவு– வரையறை

**ஹிக்கின்ஸின்** கூற்றுப்படி **தொழில் முனைவு** என்பது முதலீடு மற்றும் உற்பத்தி வாய்ப்பை தேடுதல், மூலதனத்தை அதிகரித்தல், பணியாளர்களை நியமித்தல், மூலப்பொருட்களை ஏற்பாடு செய்தல், இடங்களை தேர்ந்தெடுத்தல், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் புதிய பொருட்களை அறிமுகப்படுத்துதல், நிறுவனங்களின் அன்றாட நடவடிக்கைகளை கண்காணிக்க நல்ல மேலாளர்களைத் தேர்வு செய்தல் போன்றவையாகும்.

**ஏ.ஹெச்.கோலின்** கூற்றுப்படி, **தொழில் முனைவு** என்பது தனிநபர் அல்லது குழுவினரின் செயல்பாடுகளினால் ஒரு தொழிலைத் தொடங்குதல், பராமரித்தல், அல்லது பொருளாதார உற்பத்தி மற்றும் சேவை போன்ற பொருட்களை விநியோகம் செய்வதன் மூலம் இலாபத்தை பெறுவது.

### தொழில் முனைவோர்– வரையறை

**ஜோசப் ஸ்கம்பீட்டர்** கூற்றுப்படி புதிய உற்பத்தி காரணிகளை கொண்டு பொருளாதார வளர்ச்சி அடைபவரே ஒரு புதுமையான தொழில் முனைவோர் ஆவார்.

- **தொழில்முனைவோர்** என்பவர் ஏற்கனவே தொடங்கிய அல்லது ஒரு புதிய நிறுவனத்தைத்தொடங்குவதற்கான செயலை செய்யும் நபர் ஆவார்.

**தொழில் முனைவு மற்றும் தொழில் முனைவோருக்கான வேறுபாடுகள்**

| தொழில் முனைவு | தொழில் முனைவோர் |
|---|---|
| செயல்முறை | நபர் |
| அமைப்பு | அமைப்பாளர் |
| முடிவெடுத்தல் | முடிவெடுப்பவர் |
| படைப்பு | படைப்பாளர் |
| நிர்வாகம் | நிர்வாகி |
| மேலாண்மை | மேலாளர் |
| தலைமைத்துவம் | தலைவர் |

### பெண் தொழில் முனைவோர்

**பெண் தொழில் முனைவோர்** என்பவர் ஒரு **பெண்** அல்லது **பெண்கள் குழு** ஒரு தொழிற் நிறுவனத்தை தொடங்கி, ஒருங்கிணைத்து, செயல்படுத்துபவர் ஆவார். அதேபோல் ஒரு தொழிலை புதுப்பித்தல், பின்பற்றுதல் அல்லது ஏற்றுக்கொள்ளுதல் போன்றவை மூலம் பொருளதார செயல்பாடுகளை மேற்கொள்பவரே பெண் தொழில் முனைவோர் ஆவார்.

இந்திய அரசின் கூற்றுப்படி பெண் தொழில் முனைவோர் என்பவர் ஒரு தொழிலை சொந்தமாக உருவாக்கி மற்றும் அவற்றை கட்டுப்பாட்டுடன் நிர்வகித்து பெண்களுக்கான குறைந்த பட்சம் **51%** நிதி பங்குகள் மற்றும் குறைந்தபட்ச **51%** பெண் தொழிலாளர்களுக்கு நிறுவனத்தில் வேலை வாய்ப்பும் உருவாக்குபவரே ஆவார்.

உங்களுக்குத் தெரியுமா?

- **ஆகஸ்ட் 21 ஆம் தேதி உலக தொழில் முனைவோர் நாள்.** தொழில்முனைவோரின் புதிய படைப்பு மற்றும் தலைமைப்பண்புகளை உலகம் முழுவதும் விழிப்புணர்வுகளை ஏற்படுத்துவதே இந்நாளின் நோக்கம் ஆகும்.
- **நவம்பர் 19 பெண் தொழில்முனைவோர் தினம் ஆகும்.**



XII Std - Home Science TM_Unit 7.indd 204 20-04-2020 6.26.46 PM

### 7.2.1 தொழில் முனைவு– கருத்துக்கள்

- வளர்ந்த மற்றும் வளரும் நாடுகளில் பொருளாதார வளர்ச்சியை அதிகரிக்க இது மிக முக்கியத்துவம் வாய்ந்ததாக இருக்கின்றது
- இது மூலதனத்தை அதிகரிக்க ஊக்குவிக்கிறது மற்றும் நாட்டின் பொருளாதரத்தை உருவாக்குகின்றது.
- இது உலகெங்கிலும் உள்ள மில்லியன் கணக்கான தனிநபர்களின் நம்பிக்கை மற்றும் கனவாக இருக்கின்றது
- இது வேலையின்மை மற்றும் வறுமையை குறைத்து வெற்றியடையும் ஒரு பாதையாக இது இருக்கின்றது.
- இது திட்டமிடுதல், ஒருங்கமைத்தல், வேலை வாய்ப்புகள் மற்றும் அவற்றை மேற்கொள்ளுதல் ஆகியவைகளின் செயல் முறைகளாக இருக்கின்றது.

## 7.3 தொழில் முனைவு– நோக்கம்

இந்தியா போன்ற வளரும் நாடுகளில் தொழில் முனைவின் நோக்கம் என்பது மிகப் பெரியது. ஏனென்றால் இது வேலையின்மை மற்றும் வேலைவாய்ப்பின்மையை எதிர்த்துப் போராடும் மிக சக்தி வாய்ந்த கருவியாகும். **தொழிலாளர் பணியகத்தின்** (labour Bureau) ***2015 –2016*** அறிக்கையின்படி கடந்த ஐந்து ஆண்டுகளில் வேலையின்மை விகிதம் **5%** ஆக உள்ளதாக தெரிவித்துள்ளது.மக்கள் சொந்த வியாபாரத்தைத் தொடங்குவதற்கு ஊக்கமளிக்கும் சக்தியாகவும், பிறர் உதவியின்றி கையாளுவதற்கும் இது உதவுகிறது. இவற்றில் அதிகமான இடையூறுகளை எதிர்ப்பதற்கு தேவையான தைரியம், திறன், நுணுக்கமான தொழில் நுட்பம் ஆகியவற்றின் மூலம் கிடைக்கக்கூடிய தகவல்களின் அடிப்படையில் தொழில் முனைவு, இளைஞர்களிடையே வலியுறுத்தப்பட வேண்டும். தன்னுடைய தொழிலின் முதலாளி நாம் என்னும் எண்ணங்களை வளர்ப்பதற்கு இது ஒரு வாய்ப்பாக அமைகிறது.

### 7.3.1 தொழில் முனைவு– முக்கியத்துவம்


பின்வரும் காரணங்களுக்காக தொழில் முனைவு மிக முக்கியமானதாகும்.

- **வேலையின்மையைக் குறைத்தல்**
  தொழில் முனைவின் வளர்ச்சி சுயதொழில் வாய்ப்புகளை உருவாக்குவதன் மூலம் வேலையின்மையைக் குறைக்க பயன்படுகிறது.
- **சந்தையில் போட்டியை உருவாக்குதல்**
  சந்தையில் போட்டியை ஏற்படுத்த விலையில் வேறுபாடுகளுடன் கூடிய புதிய தயாரிப்புகளை வாடிக்கையாளர்கள் வாங்குவதன் மூலம் தொழில் முனைவு போட்டியை உருவாக்குகிறது.
- **உள்ளூர் வளங்களை பயன்படுத்துதல்**
  தொழில் முனைவு வளர்ச்சி உள்ளூர் வளங்களின் பயன்பாட்டை அதிகப்படுத்துகிறது. அதனால் உள்ளூர் பணப் பரிவர்த்தனையை அதிகரிக்கிறது.
- **வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துதல்**
  வெற்றிகரமான வியாபார முயற்சிகள் தனிநபரின் நிதிநிலைமையை அதிகரிப்பதால் வாழ்க்கைத் தரம் தொடர்ந்து மேம்படுகிறது.
- **பொருளாதார சுதந்திரம்**
  ஒரு தனிநபரின் ஒட்டுமொத்த வளர்ச்சிக்கு உதவக் கூடிய பொருளாதார சுதந்திரத்தை தொழில் முனைவு வழங்குகிறது.

### 7.3.2 தொழில் முனைவோரின் பணிகள்

தொழில் முனைவோரின் முக்கிய பணிகள் நான்கு பிரிவுகளாக வகைப்படுத்தப்படுகின்றன.

*i.* **தொழில் முனைவோர் செயல்பாடுகள்**
*ii.* **நிர்வாக செயல்பாடுகள்**
*iii.* **தொழில் முன்னேற்ற ஆக்க முயற்சி செயல்பாடுகள்**
*iv.* **வணிக செயல்பாடுகள்**




## 1. தொழில் முனைவோர் செயல்பாடுகள்

தொழில் முனைவோர் முக்கிய செயல்பாடுகள் **தொழில்களை ஒருங்கிணைத்தல், இடர்பாடுகளை தாங்குதல்,** மற்றும் **புதுமைகளைக் கண்டுபிடித்தல்** ஆகும்.

ஒரு தொழில் முனைவோர் என்ன, எப்படி மற்றும் எவ்வளவு பொருட்களை உற்பத்தி செய்ய வேண்டும் என்று மனதில் தீர்மானிக்க வேண்டும். இது வியாபார தேவைகளின் அடிப்படையில் பொருட்கள் அமைந்துள்ளது. தொழில் தொடங்குவதற்கான இடம், உற்பத்திகளின் அளவு, மூலப் பொருட்கள், உழைப்பு, மூலதனம் போன்றவைகளை நிர்ணயிக்க வேண்டும்.

ஒரு தொழில் முனைவோர் முறையாக செயல்பாடுகளை செய்யாமல் இருந்தால் இடர்பாடுகளையும் நிச்சயமற்ற தன்மைகளையும் மேற்கொள்ள வேண்டும். வெற்றிகரமான தொழில்முனைவு என்பது புதிய தயாரிப்புக்கான தேவைகளை எதிர்பார்க்க வேண்டும். சில நேரங்களில் புதிய தயாரிப்புக்கான தேவை இருக்கலாம் அல்லது இல்லாமலும் இருக்கலாம். காப்பீடு இல்லாத இடர்பாடுகளையும் தொழில் முனைவோர் மேற்கொள்ள வேண்டும். தைரியமான தொழில் முனைவோர் காப்பீடு மற்றும் காப்பீடு அல்லாத இடர்பாடுகளையும் மேற்கொள்ள வேண்டும்.

ஒரு தொழில் முனைவோர் சந்தையில் தொடர்ந்து நீடிப்பதற்கும், உற்பத்தி செய்த பொருளை தக்கவைத்துக் கொள்வதற்கும் ஒரு புதுமையாளராக இருக்க வேண்டும். எப்போதும் புதுமை என்ற ஒன்றை மட்டும் உறுதியாக கூறமுடியாது. இது புதிதாக தோன்றுகிறது, மறைகிறது பிறகு மீண்டும் தோன்றுகிறது இதை ஊகிக்க முடியாது, ஒரு தொழில் முனைவோர் தனது பணியில் வெற்றிகரமாக இருக்க **தைரியம், நம்பிக்கை மற்றும் விடாமுயற்சி** போன்றவை தேவைப்படுகிறது.



XII Std - Home Science TM_Unit 7.indd 206 20-04-2020 6.26.46 PM

## 2. நிர்வாக செயல்பாடுகள்

மேலாண்மை என்பது மற்றவர்களிடம் இணைந்து பணியாற்றக் கூடிய கலையாகும். **ஹென்ரி போயல் (1949)** என்பவரை **மேலாண்மை கொள்கையின் தந்தை** என அழைக்கப்படுவர் அவரின் கூற்றுப்படி மேலாண்மை கொள்கை என்பது மேலாண்மையை முன்கணித்து திட்டமிடுதல், கருத்துகளை பரிமாறுதல், ஏற்பாடு செய்தல், ஆணையிடுதல் ஒருங்கிணைத்தல் மற்றும் கட்டுப்படுத்துதல் போன்றவையாகும்.

தொழில் முனைவோரின் நிர்வாகச் செயல்பாடுகளை பின்வரும் ஐந்து வகைகளால் வகைப்படுத்தலாம்.

*i.* **திட்டமிடுதல்**

*ii.* **ஏற்பாடு செய்தல்**

*iii.* **பணியாளர்கள் நியமனம் செய்தல்**

*iv.* **இயக்குதல்**

*v.* **கட்டுப்படுத்துதல்**

### i. திட்டமிடுதல்

திட்டமிடுதல் என்பது இலக்கு மற்றும் நோக்கங்களை நிறைவேற்றுவதற்கு முன்னரே தீர்மானிக்கும் ஒரு செயல் ஆகும். தொழில் முனைவோர் என்ன, எப்படி, எப்போது, யாரால், எவ்வாறு, செய்ய வேண்டும் என்பதை முடிவு செய்து திட்டுமிடுதல் வேண்டும். முறையான திட்டமிடுதல் குழப்பத்தைத் தடுக்கிறது. அது வேலை செய்யும் செயலின் விருப்பமான செயல் திறனை பாதிக்கின்றது.

### ii. ஏற்பாடு செய்தல்

தொழில்முனைவோர்களின் செயல்பாடுகள் மனிதன், பொருள், இயந்திரம், பணம் போன்றவற்றைக் கொண்டு வேலையில் ஒன்றாக ஈடுபட்டு திட்டங்களை செயல்படுத்த ஏற்பாடு செய்தல் ஆகும். இவ்வாறு ஒரு நிறுவனத்தின் செயல்பாட்டை முறைபடுத்தப்படும்போது தொழில் முனைவோரின் நோக்கம் வியாபார திட்டத்தை செயல்படுத்தி, ஒருங்கிணைந்து மற்றும் கூட்டுறவு நடவடிக்கையின் மூலம் அனைத்து பணியாளர்களும் இணைந்து வேலை செய்வதற்கு ஏற்பாடு செய்தல் ஆகும்.

### iii. பணியாளர் நியமனம் செய்தல்

பணியாளரிடம் நியமனம் என்பது மனித வள திட்டம் மற்றும் மனிதவள மேலாண்மையை உள்ளடக்கியதாகும். தொழில் முனைவோர் தங்களுடைய பணியாளர்களின் செயல்பாடுகள் அடங்கிய பட்டியலை தயாரித்தல். அவை:

- பணியாளரிடம் கிடைக்கக்கூடிய வளங்கள்
- பணியாளரின் தேவைகள்
- பணியாளர்களின் மனித சக்தி
- பணியாளர்களின் தேர்வு மற்றும் ஊதியம்
- பணியாளர்களின் பயிற்சி, வளர்ச்சி மற்றும் மதிப்பீடு போன்றவை ஆகும்

### iv. இயக்குதல்

இயக்குதல் என்பது ஒரு தொழில் முனைவோரின் இலக்குகளை அடைவதற்கு பணியாளர்களை திறமையுடன் பணியில் ஈடுபட நல்ல வழிகாட்டியாகவும், ஆலோசனையாளராகவும், ஊக்கமளிக்கும் ஒரு செயல்முறையே இயக்குதல் ஆகும்.

### v. கட்டுப்படுத்துதல்

கட்டுப்படுத்துதல் என்பது ஒரு தொழில் முனைவோரினால் கண்காணிக்கப்படும் கடைசி மேலாண்மை செயல்பாடுகள் ஆகும். இலக்கு அல்லது நிலையான செயல்திறனுடன், உண்மையான செயல்திறனுடன் ஒப்பிடும் போது அவை இரண்டுக்கும் இடையே உள்ள மாறுபாட்டை கண்டறிந்து அவற்றை கட்டுப்படுத்தி சரியான நடவடிக்கைகளை எடுப்பதன் மூலம் தொழில் முனைவோரின் இலக்கு நிறைவேறுகிறது.

## 3. தொழில் முன்னேற்ற ஆக்கமுயற்சி செயல்பாடுகள்

### i. வியாபார எண்ணங்களின் மூலம் தொழிலை அடையாளம் மற்றும் தேர்வு செய்தல்

வெகுமதியான மற்றும் இலாபகரமான வணிகத் திட்டத்தின் தேர்வு பல செயல்முறைகளை உள்ளடக்கியது. தனிநபர்

மற்றும் உறவினர்களிடமிருந்து பெறும் அறிவு மற்றும் அனுபவத்தின் மூலம் வியபாரத்தைப் பற்றிய அடிப்படையான தகவல்களை சேகரித்தல் ஆகும். அவ்வாறு பெறப்பட்ட தகவல்களின் மூலம் புதுமையான தொழிலை கண்டறிந்து தேர்வு செய்து ஒரு வணிக நிறுவனமாக தொடங்க ஏற்பாடு செய்தல் ஆகும்.

இந்த செயல்முறை "தொழில் வாய்ப்புகளை ஆய்வு செய்தல் மற்றும் கண்டறிதல்" மூலம் வரையறுக்கப்படுகிறது. இதன் மூலம் பெறப்பட்ட கருத்துக்கள், வரவு மற்றும் செலவுகளின் அடிப்படையில் பகுப்பாய்வு செய்யப்படுகின்றன. மேலும் வணிக நிறுவனமாக செயல்பட பயனுள்ள கருத்துக்களை இறுதியாக தேர்வு செய்யப்படுகிறது.

### ii. வணிகத்திட்டம் அல்லது திட்ட அறிக்கையை தயாரித்தல்

ஒரு குறிப்பிட்ட காலத்தில் குறிப்பிட்ட குறிக்கோளை அடைவதற்கு தொழில் முனைவோரால் தயாரிக்கப்படும் திட்டமே **வணிகத்திட்டம் அல்லது "திட்ட அறிக்கை"** எனப்படும்.

நிறுவனத்திற்கான நிலம், இருப்பிடம் மற்றும் கட்டிடத்திற்கு தேவைப்படும் பொருட்கள், ஆலை மற்றும் இயந்திரம், மூலப்பொருட்களின் பயன்பாடுகள், போக்குவரத்து மற்றும் தகவல் தொடர்பு, மனித வளம், மூலதனம், மூலதனச் செலவுகள் போன்ற அனைத்துச் செயல்பாடுகளும் வணிக திட்டத்தின் அறிக்கையில் இருக்க வேண்டும்.

### iii. நிதி தேவைகள்

தொழில் முனைவோர் தொழிலை விரிவுப்படுத்த தேவையான நிதிகளை திட்டமிட வேண்டும். நீண்ட கால மற்றும் குறுகிய காலத் தேவைகள் எனத் தனித் தனியாக கண்டறிய வேண்டும். பின்னர் தேவையான நிதி பெறும் இடங்களையும், உற்பத்தி செய்யும் பொருட்களையும் குறிப்பிட வேண்டும். தொழில் முனைவோரின் மூலதனம், பல்வேறு நிதிநிறுவனங்கள் மற்றும் வங்கிகளிலிருந்து பெறப்படும் மூலதனம் பற்றி தெளிவாக தீர்மானிக்கப்பட வேண்டும்.

## 4. வணிகச் செயல்பாடுகள்

### i. தயாரிப்பு உற்பத்தி

நிறுவனங்கள் தொடங்கப்பட்டவுடன் பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகின்றன. உற்பத்தி செயல்பாடுகளில் தொழிற்சாலைகளை நிறுவ இடத்தை தேர்ந்தெடுத்தல், வடிவமைத்தல், திட்டமிடுதல், தயாரிக்கப்படும் பொருட்களின் வகைகளை ஆராய்தல் போன்ற அனைத்தும் இதில் இடம்பெற வேண்டும்.

உற்பத்தி செயல்பாட்டின் செயல்திறன் என்பது உற்பத்தி நடவடிக்கைகளில் முறையாக திட்டமிடுதல், கட்டுப்படுத்துதல், பராமரித்தல் மற்றும் பழுது பார்த்தல், கொள்முதல் செய்தல், சேமித்தல், பொருட்களைக் கையாளுதல் போன்ற அனைத்தும் இதில் அடங்கும்.

### ii. சந்தைப் படுத்துதல்

சந்தைப்படுத்துதல் என்பது வாடிக்கையாளர் அல்லது பயனாளிகள், தயாரிப்பாளர்களிடம் இருந்து பெறப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் செயல்பாடுகளை செய்வதற்கு வழி நடத்தும் ஒரு வணிக செயல்பாடுகளே **சந்தைப்படுத்துதல்** ஆகும். வாடிக்கையாளர்களிடம் இருந்துதான் இது தொடங்குகிறது அல்லது முடிவடைகிறது. சந்தைப்படுத்தல் என்பது விற்பனைக்கு மட்டும் அல்ல. இது வாடிக்கையாளர்களை ஆய்வு செய்தல், தயாரிக்கும் பொருட்களை திட்டமிடுதல், தரத்தை மதிப்பீடு செய்தல், உறை இடுதல், விலை நிர்ணயம் செய்தல், சேமித்தல், விளம்பர விநியோக வழிகள் போன்றபலசெயல்பாடுகளைகொண்டுள்ளது. சந்தைப்படுத்துதல் செயல்பாட்டின் வெற்றி என்பது பொருத்தமான "சந்தைப்படுத்தலின் கலவை" மூலம் இணைக்கப்பட்டுள்ளது.



XII Std - Home Science TM_Unit 7.indd 208 20-04-2020 6.26.47 PM

**"சந்தைப்படுத்தல் கலவை"** என்பது **4p's** அதாவது **தயாரிப்பு பொருட்கள்** (Product), **விலை** (Price), **தொழில் முன்னேற்ற ஆக்க முயற்சி** (Promotion), **உடல் சார்ந்த வேலைகள்** (Physical distribution) ஆகியவற்றை இது குறிக்கின்றது. தற்போது "சந்தைப்படுத்தல் கலவை" என்பது **3p's** அதாவது **உறையிடுதல்** (Packaging), **மக்கள்** (People) மற்றும் **செயல்முறை** (Process) போன்றவையாகும்.

**iii. கணக்கு வைப்பு அல்லது கணக்கியல்**

ஒரு வியாபார நிறுவனத்தின் முக்கிய நோக்கம் இலாபத்தை அடைவதும் பணத்தைப் பெருக்குவதும் ஆகும். இது கணக்கியல் மூலம் உறுதி செய்யப்படுகிறது. **கணக்கியல் என்பது** இலாப, நட்டக் கணக்கை பதிவு செய்தல், வகைப்படுத்துதல், திறமையான முறையில் பண பரிவர்த்தனைகள் மற்றும் நிதி நிலைமைகளைப்பற்றி தெளிவாக குறிக்கும் பட்டியல் ஆகும்.

ஒரு குறிப்பிட்ட கணக்கீட்டு காலத்தில் நிறுவனம் இலாபம் ஈட்டப்பட்டதா அல்லது நட்டமடைகிறதா என்பதை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக **இலாப நட்டக் கணக்கு** தயாரிக்கப்படுகிறது. நிறுவனத்தின் நிதி நிலைமையை ஒரு குறிப்பிட்ட தேதியில் அறிந்துக் கொள்ள இருப்புநிலைக் குறிப்பு தயாரிக்கப்படுகிறது. **இருப்புநிலைக் குறிப்பை "நிலை அறிக்கை"** என்றும் அழைக்கலாம்.

## 7.3.3 தொழில்முனைவோரின் பண்புகள்


ஒரு வெற்றிகரமான தொழில் முனைவோராக இருப்பதற்கு பின்வரும் பண்புகளைப் பெற்றிருத்தல் வேண்டும்.

- **அறிவுத் திறன்:** தொழில் முனைவோர் ஆக்கப்பூர்வமான சிந்தனைகளை கொண்டிருக்க வேண்டும். பிரச்சனைகள் மற்றும் சூழ்நிலைகளை ஆராய்ந்து அவற்றிற்கேற்ப மாற்றங்களை செய்யக் கூடியவராக இருக்க வேண்டும்.
- **வியாபார இரகசியம்:** தொழில்முனைவோர் போட்டியாளர்களிடமிருந்து வியாபார இரகசியங்களை பாதுகாக்க வேண்டும்.
- **மனித உறவுகள்:** தொழில்முனைவோர், வாடிக்கையாளரிடம் நல்லுறவுகளை வளர்க்க கூடியவராக இருக்க வேண்டும்.
- **தொடர்பு திறன்:** தொழில் முனைவோர் நல்ல தொடர்பு திறனைப் பெற்றிருக்க வேண்டும்.
- **தொழில் நுட்ப அறிவு:** தொழில் முனைவோர் போதுமான தொழில் நுட்ப அறிவைப் பெற்றிருக்க வேண்டும்.
- **புதுமையான திறன்:** தொழில் முனைவோர் புதிய வாய்ப்புகளைத் தேடும் படைப்பாற்றல் திறனை பெற்றிருக்க வேண்டும்.
- **சவால் எடுத்தல்:** தொழில் முனைவோர் தங்கள் இலக்குகளை அடைய சிறிது இடையூறுகளை சந்தித்து சவால்களை பெற்று சாதிக்கும் திறனை பெற்றிருக்க வேண்டும்.
- **நல்ல கருத்துக்களின் உணர்வு:** தொழில் முனைவோர் பணியை நிறைவேற்றுவதற்கு உண்மையான நல்ல கருத்துக்களை சேகரித்து பகுப்பாய்வு செய்யும் திறனைப் பெற்றிருக்க வேண்டும்.
- **எதிர் கால நோக்குநிலை:** தொழில் முனைவோர் எதிர் காலத்தை திட்டமிட்டு சிந்தித்துப் பார்க்க வேண்டும்.
- **நெகிழ்வு தன்மை:** தொழில் முனைவோர் மாற்றியமைக்கப்பட்ட சூழல்களை சரி செய்வதற்கு தேவையான இணங்கத்தக்க மற்றும் நெகிழ்வான தன்மையை பெற்றிருக்க வேண்டும்.

## 7.3.4 நிறுவனங்களின் வகைகள்

### 1. உற்பத்தி நிறுவனங்கள்

தயாரிப்பு அடிப்படையிலான நிறுவனங்கள் பொருட்களை உற்பத்தி செய்கிறது. இயந்திரங்கள் மற்றும் இதரப்




பொருட்களை பல்வேறு நோக்கங்களுக்காக பயன்படுத்தப்படுகின்றன.

**குறுந்தொழில் நிறுவனம்**


- குறுந்தொழில் நிறுவனமானது ***10 நபர்கள்*** அல்லது ***அதற்கும் குறைவான*** எண்ணிக்கையில் வேலை செய்யும் ஒரு சிறு வியாபாரத்தை குறிக்கிறது.
- இந்நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு ***5 லட்சம்*** முதல் ***25 லட்சம்*** வரை.
- இந்நிறுவனத்தின் வேலைகள் மற்றும் செயல்பாடுகள் ***விருப்பத்திற்காக இயங்காமல் தேவைகளைச் சார்ந்து*** இயங்குகிறது.




**சிறு தொழில் நிறுவனம்**

- சிறுதொழில் நிறுவனமானது ***50 நபர்கள்*** அல்லது ***அதற்கும் குறைந்த எண்ணிக்கையிலான*** நபர்களைக் கொண்ட தொழில்களாகும்.

- இந்நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு ***25 லட்சம்*** முதல் ***5 கோடி*** வரை.
- இந்நிறுவனத்தின் வேலைகள் மற்றும் செயல்பாடுகள் ஒரு ***சிறிய அளவு இலாபம்*** பெறுவதற்கு பயன்படுகிறது.



**நடுத்தர தொழில் நிறுவனம்**

- நடுத்தர தொழில் நிறுவனமானது ***அதிகபட்சம் 250 நபர்கள்*** வேலைசெய்யும் ஒரு தொழிலாகும்.
- இந்நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு ***5 கோடி*** முதல் ***10 கோடி*** வரை.
- இந்நிறுவனத்தின் வேலைகள் மற்றும் செயல்பாடுகள் ***வாழ்க்கைத்தரத்தை உயர்த்துவதற்கு*** நியாயமான ***லாபத்தை ஈட்டித் தர*** உதவுகிறது.



XII Std - Home Science TM_Unit 7.indd 210 20-04-2020 6.26.47 PM



### 2. சேவை நிறுவனங்கள்

சேவை தொழில் சார்ந்த நிறுவனங்கள் வாடிக்கையாளர்களுக்கு சேவைகளை வழங்குகின்றன. இந்த சேவைகள் **கல்வி, சுகாதாரம், வங்கி, தகவல் தொடர்பு துறை** போன்ற துறைகளுடன் தொடர்புடையதாக இருக்கின்றன.

- **குறுந்தொழில்** நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு **10 லட்சம்** வரை.
- **சிறுதொழில்** நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு **10 லட்சம்** முதல் **2 கோடி** வரை.
- **நடுத்தர தொழில்** நிறுவனத்தின் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் முதலீடு **2 கோடி** முதல் **5 கோடி** வரை.

## 7.4 சிறு தொழில் தொடங்குவதற்கான படி நிலை




சிறுதொழில் தொடங்குவதற்கு தொழில் முனேவார் படிநிலைகளை மேற்க்கொள்ள வேண்டும். அவை தொடக்க நிலை மற்றும் செயல்ப்பாட்டுட நிலைகளாகும்.

### 7.4.1 தொடக்க நிலை

தொடக்க நிலையில் 9 படிநிலைகள் உள்ளன. அவைகள்

**படிநிலை 1 :**

**சுய தொழில் தொடங்க முடிவு எடுத்தல்**

தேவையான கல்வி, தொழில் நுட்ப அறிவு, பயிற்சி போன்றவற்றுடன் தங்கள் தயாரிக்கும் பொருட்கள் தேவையான வளங்கள் நிர்வாக திறன் போன்றவற்றை உயர்த்துவதற்கான திறன்களை அவர்கள் பெற்றிருக்க வேண்டும். தொழில்முனைவோராக மாறுவதற்கு முடிவெடுக்கும் போது உட்புற மற்றும் வெளிப்புற காரணிகளால் பாதிப்படைகிறார். **உட்புறக் காரணிகள்** பின்வருமாறு அவை கல்வி, தொழில் அனுபவம், உற்பத்தி துறையில் விருப்பமாகவும், சுதந்திரமாகவும் வேலை செய்தல், புதிய துறையை தொடங்குதல் மற்றும் குடும்ப சூழல் போன்றவை. **வெளிப்புறக் காரணிகள்** பின்வருமாறு அவை அரசாங்கத்திடமிருந்து உதவி, நிதி நிறுவனங்களின் உதவி, தொழில் நுட்பம் மற்றும் மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை, உற்பத்தி பொருளின் தேவைகள், கூடுதல் நிதியின் பயன்பாடு மற்றும் பிற காரணிகள் ஆகும்.

**படிநிலை 2**

**வணிக சூழலை ஆய்வு செய்தல்**

புதிய தொழில் முனைவோர் அவர்களின் தொழில் சார்ந்த நிர்வாக அமைப்பு செயல்திட்டத்தை பின்பற்றக்கூடிய வழிமுறைகள், நிறுவனங்களின் விதிகள் மற்றும் கட்டுப்பாடுகள் போன்றவற்றை திட்டமிட்டு வணிக சூழலை பற்றி ஆய்வு செய்ய வேண்டும்.

**படிநிலை 3**

**எண்ணங்களை தேர்வு செய்தல்**

நிறுவனத்தை அமைப்பதற்கான மூன்றாவது படிநிலை எண்ணங்களை தேர்வு செய்தல் ஆகும். தொழில் முனைவோர் பல எண்ணங்களை ஆலோசித்து கருத்தில் கொள்ள வேண்டும் அவைகள்


XII Std - Home Science TM_Unit 7.indd 211
20-04-2020 6.26.48 PM

- தொழிலில் உள்ள புதுமை மற்றும் போட்டிகள் பற்றி அறிந்து கொள்ளுதல்.
- மூலப்பொருட்கள் கிடைக்கும் தன்மை பற்றி தெரிந்து கொள்ளுதல்
- கிடைக்கக்கூடிய உள்கட்டமைப்பு வசதிகளில் திருப்தியாகுதல்.

தொழில் தொடர்பான அனுபவம், தெளிவான அறிவு, மூலப்பொருட்களின் தேவை / விநியோகம், அரசாங்க கொள்கைகள், கிடைக்கக்கூடிய இலாபம் போன்றவை புதிய எண்ணங்களை தேர்வு செய்ய உதவுகிறது. இந்த காரணிகளின் பகுப்பாய்வு தொழில் முனைவோரின் செயல்பாட்டிற்கான சரியான எண்ணங்கள் அல்லது யோசனைகளை தேர்ந்தெடுக்க உதவுகிறது.

### படிநிலை 4

### பல்வேறு வகையான நிறுவன அமைப்பைத் தீர்மானித்தல்

தொழில் முனைவோர் தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகத்திற்கான நிறுவன அமைப்புகளை தீர்மானிக்க வேண்டும். அவற்றில் பல்வேறு வணிக நிறுவனங்கள் உள்ளன. அவை தனி உரிமையாளர் நிறுவனம், கூட்டு நிறுவனம், கூட்டுறவு சங்கம், கூட்டு குடும்ப நிறுவனம், நிறுவன கழகம் போன்றவையாகும்.

**தனி உரிமையாளர் நிறுவனம்:** தனி உரிமையாளர் நிறுவனம் என்பது ஒரு தனிப்பட்ட வியாபார நிறுவனம் ஆகும். தனிநபர் தனது சொந்த மூலதனத்தைப் பயன்படுத்தி இலாபம் முழுவதும் பெற்றும், இடையூறுகள் மற்றும் நஷ்டங்கள் போன்றவை ஏற்பட்டால் அதையும் தாங்கிக் கொள்ள வேண்டும். நகராட்சி அதிகாரிகளிடமிருந்து வர்த்தக உரிமச் சான்றிதழ் பெறுவதற்கு எந்த ஒரு ஆவணமும் தேவையில்லை.

**கூட்டு நிறுவனம்:** கூட்டு நிறுவனம் என்பது இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நபர்கள் தங்கள் நிதி மற்றும் நிர்வாக திறமைகளை ஒன்றிணைந்து ஒரு தொழிலில் ஈடுபட்டு அதன் இலாபத்தையும் அல்லது நட்டத்தையும் பகிர்ந்து கொள்ள உடன்பட வேண்டும். எந்த ஒரு கூட்டு நிறுவனமும் 20 க்கும் மேற்பட்ட நபர்களை கொண்டிருக்க கூடாது. கூட்டு நிறுவனத்தை ஆரம்பிக்கும் போது ஒரு எழுத்துப்பூர்வ ஒப்பந்தம் போடப்பட வேண்டும். அதற்கு கூட்டு ஒப்பந்தம் என்று அழைக்கப்படுகிறது.

**கூட்டுறவு சங்கம்:** கூட்டுறவு சங்கம் என்பது தங்களின் பொருளாதார நலன்களை மேம்படுத்துவதற்கான வேலைகளை ஒன்றிணைந்து சுய உதவி மற்றும் நபர்களின் தன்னார்வ சங்கத்தின் அடிப்படையில் இது செயல்படுகிறது. இதனுடைய முக்கிய குறிக்கோள் உறுப்பினர்களுக்கு ஆதரவை வழங்குதல் ஆகும்.

**கூட்டு குடும்ப நிறுவனம்:** கூட்டு குடும்ப நிறுவனம் என்பது மூன்று தொடர்ச்சியான தலை முறைகளின் குடும்ப உறுப்பினர்களால் நடத்தப்படும். ஒரு நிறுவனம் ஆகும். குடும்பத்தின் தலைவர் **கர்த்தா (Karta)** அல்லது **மேலாளர்** ஆவார். மற்ற குடும்ப உறுப்பினர்களை **கோபர்சென்னர்ஸ் (Coparceners)** அல்லது வணிக உறுப்பினர்கள் என்று அழைக்கப்படுகிறார்கள். இவர்கள் அனைவருக்கும் வணிகத்தின் சொத்துக்கள் மீது சம உரிமை உண்டு.

**நிறுவன கழகம்:** நிறுவன கழகம் என்பது தனியார் நிறுவன கழகம் மற்றும் பொது நிறுவன கழகம் ஆகும். தனியார் நிறுவன கழகத்தில் குறைந்த பட்சம் 2 நபர்கள் முதல் அதிக பட்சம் 50 நபர்கள் கொண்ட அமைப்பாகும். பொது நிறுவனத்தில் குறைந்தபட்சம் 7 நபர்கள் முதல் வரம்பற்ற அதிகபட்ச நபர்களை கொண்டு இந்நிறுவனம் அமைக்கப்பட்டுள்ளது.

தொழில் முனைவோர் தான் தொடங்கும் தொழிலுக்கான பொருத்தமான நிறுவன அமைப்பை தேர்வு செய்து தனது தொழிலை தொடங்க முடிவு எடுக்க


XII Std - Home Science TM_Unit 7.indd 212 20-04-2020 6.26.48 PM

வேண்டும். வணிகத்தின் அளவு, மூலதன முதலீடு வணிக கழகத்தின் கட்டுப்பாட்டு வரி, நிகழ்வுகள் மற்றும் அரசாங்க நிபந்தனைகள் போன்றவற்றின் தன்மையை பொறுத்து நிறுவனத்தின் அமைப்பை தேர்வு செய்ய வேண்டும்.

### படிநிலை 5

#### திட்ட அறிக்கையை தயாரித்தல்

தேர்ந்தெடுக்கப்பட்ட வணிகத்தைப் பற்றி விரிவான தகவல்களை அளிக்கும் ஒரு திட்ட அறிக்கையை தொழில் முனைவோர் தயாரிக்க வேண்டும் அதில் வணிகத்தை பற்றிய சுருக்கமான அறிமுகம், நிறுவனத்தின் கூறுகள், அதன் தன்மை பற்றிய விபரங்கள், பணியாளர்கள், தயாரிப்பு பொருட்களை சந்தைப்படுத்துதல், போட்டிகள், உற்பத்தி செயல்முறை, இயந்திரங்கள், மூலப்பொருட்கள், நிலம், கட்டிடம், பொது மேலாண்மை, தொழில் நுட்ப ஊழியர்கள், திட்டத்தின் செலவு, உற்பத்தி செலவு, இலாபத் தன்மை, திட்ட செயல்பாட்டு பட்டியல் திருப்பிச் செலுத்தக்கூடிய அட்டவணை மற்றும் பத்திரங்கள் போன்றவை திட்ட அறிக்கையில் தெளிவாக இடம் பெற்றிருக்க வேண்டும்.

### படிநிலை 6

#### திட்ட மதிப்பீடு நிலையை ஆராய்தல்

நிதி உதவி வழங்கக் கூடிய வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் இத்திட்டத்தின் அதாவது நம்பகத் தன்மையை ஆய்வு செய்வதோடு இந்த திட்டத்தின் முதலீட்டில் போதுமான வருமானத்தை ஈட்டுகிறதா மற்றும் இத்தொழிலின் கடனை பொறுத்து அசல் தொகையையும், வட்டியையும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குள் திருப்பி செலுத்த முடியுமா என்பதை உறுதி செய்ய வேண்டும். நிதி நிறுவனங்களால் மேற்க்கொள்ளபடும் திட்ட மதிப்பீடு என்பது தொழில்நட்பம், நிதி, பொருளாதாரம், நிர்வாக செயல்பாடு மற்றும் நிறுவன மதிப்பீடு போன்றவைகளின் அடிப்படையில் அமைவதாகும்.

### படிநிலை 7

#### இடம் மற்றும் மனைகளை தேர்வு செய்தல்

ஒரு பொருத்தமான இடத்திற்கான தேர்வு அந்த தொழிற் நிறுவனத்தின் முக்கியமான முடிவாகும். இடத்தை தேர்வு செய்யும் போது சந்தைக்கு மிக அருகிலும், மூலப்பொருட்கள், மின்சாரம் மற்றும் நீர், போக்குவரத்து,தொழிற்பேட்டை,திறமையுள்ள நபர்கள், அங்குள்ள சூழ்நிலைகள், அரசாங்க சலுகைகள் மற்றும் மானியங்கள், விநியோகிக்க கூடிய வழிமுறைகள் போன்றவற்றையும் சார்ந்துள்ளது.

### படிநிலை 8

#### தற்காலிக பதிவு செய்தல்

தற்காலிக பதிவு விண்ணப்பம் மாவட்ட தொழில் மையத்தில் சமர்ப்பிக்க வேண்டும். தற்காலிக பதிவு என்பது சாதாரணமான முறையில்தானாகவேநடைபெறும்.விண்ணப்பம் பெற்ற 7 நாட்களுக்குள் இரசீது வழங்கப்படுகிறது. தற்காலிக பதிவு 6 மாதங்களுக்கு மட்டுமே செல்லுபடியாகும். பிறகு அதை புதுப்பித்துக் கொள்ள, நிறுவனத்தை தொடங்குவதற்கு பயனுள்ள பல நடவடிக்கைகளை எடுத்தும், அதனை முடிக்க முடியாத காரணத்தை தகுந்த ஆதாரத்துடன் சமர்ப்பிப்பதன் மூலம் பெறலாம். அப்படி இல்லை என்றால் அதை புதுப்பிக்க முடியாது. நிறுவனம் தொடங்குவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் எடுக்கப்பட வேண்டும். (உ.தா) தொழிற்சாலையின் கட்டிடத்தை தயார்படுத்துதல், மின்சார இணைப்பு பெறுதல், இயந்திரங்கள் அமைத்தல் போன்றவையாகும். இதன் பிறகு விண்ணப்பங்கள் தற்கால பதிவுகளிலிருந்து நிரந்தர பதிவிற்கு மாற்றம் செய்து கொள்ளலாம்.

விண்ணப்பப்படிவங்கள்,உரிமையாளர் அல்லது பங்குதாரர் அல்லது இயக்குநர்களால் முறையாக பூர்த்தி செய்து கையொப்பமிட வேண்டும். பரிந்துரைக்கப்பட்ட நீதி மன்ற கட்டண முத்திரை, உரிமையாளர்களின் மூன்று பாஸ்போர்ட் அளவு புகைப்படங்கள்,

திட்ட விவரங்களின் / நிறுவனத்தின் பதிவு குறிப்பு மற்றும் நிறுவன அமைப்பு பத்திரம் போன்ற இவை அனைத்து தற்காலிக பதிவிற்கு தேவையான ஆவணங்கள் ஆகும்.

### படிநிலை 9

**இயந்திரங்கள் மற்றும் தொழில்நுட்பத்தை ஆய்வு செய்தல்**

தொழில் முனைவோர் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களின் அளவை மதிப்பீடு செய்ய வேண்டும். இயந்திரத்தை விற்பவரின் பெயர் மற்றும் விலைகள் குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். தேவையான இயந்திரங்களை வாங்குவதற்கு முன் விவரக் குறிப்புக்கள், அவற்றின் தரம், விநியோகிக்க கூடிய நேரம், மற்றும் விலை நிலவரம் போன்றவற்றை கவனமாக ஆய்வு செய்து முடிவெடுத்தல் வேண்டும்.

## 7.4.2 செயல்பாட்டு நிலை

செயல்பாட்டு நிலையில் 12 படிநிலைகள் உள்ளன.

### படிநிலை 1

**சட்ட ரீதியாக உரிமம் பெற ஏற்பாடு செய்தல்**

உரிமம் பெறுவதிலிருந்து விலக்கு அளிக்கப்படும் நிறுவனங்கள், தொழில் துறை அமைச்சரகத்தில் தொழில் நுட்ப வளர்ச்சி துறையின் இயக்குனரிடம் பதிவு செய்ய வேண்டும். சிறுதொழில் மற்றும் குறுந்தொழில் நிறுவன உரிமம் பெற அந்தந்த மாநில தொழில் துறை இயக்குனரகத்தில் பதிவு செய்ய வேண்டும். புதிய தொழில்முனைவோர், மாவட்ட சுகாதார அலுவலர்கள், தொழிற்சாலையின் பொது சுகாதார தலைமை ஆய்வாளர், இயக்குநர், மாநில மின்சார வாரியம், நகராட்சி, மாநில மாசுகட்டுப்பாட்டு வாரிய அலுவலர்கள், உள்ளூர் விற்பனை வரி அதிகாரிகள், மத்திய சுங்க வரியின் மேற்பார்வையாளர் போன்ற பல்வேறு அதிகாரிகளிடம் இருந்து அனுமதிகளை பெற வேண்டும்.

### படிநிலை 2

**நிதி ஏற்பாடு செய்தல்**

புதிய தொழில் முனைவோர் தகுதியுள்ள அதிகாரிகளிடம் இருந்து உரிமம் மற்றும் அனுமதி பெற்ற பிறகு நிதி ஏற்பாடு ஏற்பாடு செய்ய வேண்டும். ஒரு தொழிலை தொடங்க கடன் மற்றும் மூலதனம் அவர்களுக்கு தேவைப்படுகிறது.

உங்களுக்குத் தெரியுமா?

**நிதி உதவி வழங்கும் நிறுவனங்கள்:** இந்திய சிறுதொழில்கள் மேம்பாட்டு வங்கி (SIDBI) மாநில நிதி நிறுவனம் (SFC), தேசிய சிறு தொழில்கள் நிறுவனம் (NSIC) மாநில சிறு தொழில் வளர்ச்சிக் கழகம் (SIDCO) அரசு கிராம வங்கிகள், வர்த்தக வங்கிகள் போன்றவையாகும்.

### படிநிலை 3

**நிதி உதவிக்கான விண்ணப்பம் பெறுதல்**

தொழில் முனைவோர் தேவையான நிதியைப் பெற நிதி நிறுவனத்திற்கு திட்ட அறிக்கையுடன், நிதி உதவிக்கான விண்ணப்பத்தையும் சமர்பிக்க வேண்டும். விண்ணப்பத்துடன் சேர்த்து, திட்ட அறிக்கை, கூட்டு ஒப்பந்த பத்திரம் / நிறுவனத்தின் பதிவுக் குறிப்பு, நிறுவனத்தின் அமைப்பு பத்திரம், இயந்திரங்களின் விலைக் குறிப்புக்கள், நிலம் மற்றும் கட்டிடங்களின் குத்தகைக்கான ஒப்பந்தம் கட்டிட வரைபடத்திட்டம், தொழிற்சாலை கட்டித்தை பற்றிய கட்டிட கலைஞர்களின் மதிப்பீட்டு சான்றிதழ் போன்ற அனைத்தையும் சமர்ப்பிக்க வேண்டும்.

### படிநிலை 4

**கட்டிட கட்டுமான வேலைகள்**

கட்டிட ஒப்பந்தாரர், நல்ல கட்டிட கலைஞருடன் கலந்தாலோசித்து கட்டிட வேலைகளை தொடங்க வேண்டும். கட்டுமான தொழிலை தொடங்குவதற்கு



XII Std - Home Science TM_Unit 7.indd 214 20-04-2020 6.26.48 PM

முன், தொழில் முனைவோர் மாநகராட்சி அல்லது நகராட்சி அதிகாரிகள் அல்லது மற்ற உள்ளூர் அதிகாரிகளிடமிருந்து தேவையான உரிமத்தை பெற வேண்டும். இந்த கட்டிடத்தின் வரைபடம் விதிமுறைகளுக்கு உட்பட்டு வடிவமைக்கப்பட்டுள்ளது என்பதை தொழிற்சாலை ஆய்வாளர்களால் உறுதி செய்யப்பட வேண்டும். தொழிற்பேட்டையில் அரசினால் கட்டப்பட்ட தொழில்சாலை கொட்டகைகளையும் பயன்படுத்திக் கொள்ளலாம்.

### படிநிலை 5

#### இயந்திரங்கள் மற்றும் பிற நிலையான சொத்துக்கள் கொள்முதல் ஒழுங்குபடுத்துதல்

தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களுக்கான ஏற்பாடுகளும், பிற நிலையான சொத்துக்களும் தேர்ந்தெடுக்கப்பட்ட விற்பனையாளர்களிடம் வாங்கவேண்டும்.கட்டிடத்தின் கட்டுமானத்தை நிறைவு செய்யும் தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களை அமைக்க தேவையான பகுதிகளைப் பிரிக்கக்கூடிய அடிப்படையான ஒரு வடிவமைப்பை உருவாக்க வேண்டும்.

### படிநிலை 6

#### ஆலை மற்றும் இயந்திரங்களை நிறுவுதல்

தொழில் முனைவோர் இயந்திரங்களை பொருத்தமான வகையில் அமைப்பதன் மூலம் உற்பத்தி தொழிலை எளிதாக்கலாம். ஒவ்வொரு பணியாளரும் திறமையுடன் செயல்படுவதற்கு போதுமான பணி செய்யும் இடம் மற்றும் காற்றோட்டம் கிடைப்பதற்கு வழிவகை செய்ய வேண்டும். தொழிற்சாலை மற்றும் இயந்திரங்களை அமைக்க தேவையான பகுதிகளை பிரிக்கக்கூடிய அடிப்படையான ஒரு வடிவமைப்புடன் இவை இருக்க வேண்டும்

### படிநிலை 7

#### மின்சாரம் மற்றும் நீர் இணைப்பு

மின்சாரம் மற்றும் நீர் இணைப்புக்களை முறைப்படி பெற வேண்டும். நுகர்வோர் இணைக்கப்பட்ட மின்சாரம் *75 HP* க்கு **குறைவாக** இருந்தால் குறைதாழ் அழுத்த (*LT*) விநியோகத்தை பெற முடியும். இணைக்கப்பட்ட மின்சாரம் ***75 – 130 HP* க்கு இடையே இருந்தால்** நுகர்வோர் குறைதாழ் அழுத்த மின்சாரம் (***LT***) அல்லது அதிக அழுத்த (***HT***) மின்சாரம் பெறமுடியும். இணைக்கப்பட்ட மின்சாரம் ***130HP* க்கு அதிகமாக** இருந்தால் நுகர்வோர் அதிக அழுத்த (***HT***) மின்சார விநியோகத்தை மட்டுமே பெறமுடியும்.

### படிநிலை 8

#### பணியாளர் நியமனம் மற்றும் அவர்களுக்கான பயிற்சி

தொழில் முனைவோர், பணியாளர்களை நியமிக்கும்போது, அவர்களுடைய திறன், அறிவு, வேலை செய்யும் விதம், மற்றும் வேலையை முடிக்க தேவையான பல திறமைகளின் அடிப்படையில் இவர்களை தேர்ந்தெடுக்கப்பட வேண்டும். தொழில் முனைவோர் (*ESI – ACT*) தொழிலாளர் மாநில காப்பீட்டு சட்டம், குறைந்தபட்ச ஊதியச் சட்டம், ஊக்க ஊதியம் செலுத்துதல்சட்டம்,தொழிலாளர் இழப்பீட்டுச் சட்டம், ஊழியர்களின் வருங்கால வைப்பு நிதி சட்டம் போன்றவைகளை கடைபிடிக்க வேண்டும். தொழில்முனைவோர் தங்கள் ஊழியர்களுக்கத் தேவையான பயிற்சியினை வழங்க பல்வேறு பயிற்சி நிறுவனங்களின் உதவிகளையும் பெறலாம்.

### படிநிலை 9

#### மூலப்பெருட்களை கொள்முதல் செய்தல்

தொழில்முனைவோர் தாங்கள் புதிததாக தயாரிக்கும் பொருட்களை சந்தைகளில் அறிமுகப்படுத்துவதற்கு முன் மூலப்பொருட்கள் சரியான நேரத்தில் கிடைக்கின்றதா என உறுதி செய்ய வேண்டும். தேவைப்படும் மூலப்பொருட்கள் ஒரு வழியில் இருந்து கிடைப்பதற்கு பதிலாக பல வழிகளில் இருந்தும் கிடைக்க வழி செய்ய வேண்டும். வர்த்தக் கட்டுப்பாட்டு இறக்குமதி கொள்கையின் படி

மூலப்பொருட்களின் இறக்குமதி தற்காலத்தில் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. சிறு தொழில் நிறுவனம் மாநில இயக்குநரிடம் தங்களுடைய தொழிலுக்குதேவையானமூலப்பொருட்களைப் பட்டியலிட்டு பரிந்துரைக்க வேண்டும். அவர்கள் இக்கோரிக்கைகளை ஏற்றுமதி மற்றும் இறக்குமதியின் தலைமை கட்டுப்பாட்டு அதிகாரிக்கு பரிந்துரைக்கின்றனர்.

### படிநிலை 10

#### சந்தைப்படுத்துதல்

சந்தைப்படுத்துதல் என்பது தயாரிப்பு பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான வாடிக்கையாளர்களை உருவாக்கும் ஒரு சிக்கலான செயல்முறையாகும். இச்செயல்முறையானது, வாடிக்கையாளர்கள் அறிந்து கொள்வதும், அவர்களை அணுகுவதும், அவர்களின் தேவைகள் மற்றும் விருப்பங்களை மிகவும் கவனமாக கேட்பதும் மற்றும் ஒவ்வொரு முறையும் அவர்களுக்கு நல்ல முறையில் சேவை செய்வதாகும். சிறந்த சந்தைபடுத்துதல் என்பது சந்தையை பற்றிய உண்மையான தகவல்களை சேகரிப்பதன் மூலம் தொழிலை திட்டமிடுதல் மற்றும் தொழிலுக்கான முன்னேற்ற வளர்ச்சியை இது ஏற்படுத்துகிறது. சந்தைபடுத்துதல் திட்டத்தின் முக்கிய செயல்கள் என்பது வாடிக்கையாளர்களை தொடர்பு கொள்வது தயாரிப்பு மற்றும் சேவைப் பொருட்களை பற்றிய விழிப்புணர்வை ஏற்படுத்துவது, பொருட்களை வாங்க விற்க அவர்களை ஊக்கப்படுத்தும் முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். தொழில்முனைவோர் சந்தைப்படுத்துதலை நல்ல முறையில் விரிவுபடுத்த அரசாங்கத்தின் விதிமுறைகள், விற்பனைக்கூடங்களின் கொள்முதல் திட்டங்கள், சர்வதேச கண்காட்சி, மற்றும் வர்த்தக மையங்கள் போன்றவற்றை பற்றிய அறிவும், சந்தையில் போட்டியை சமாளித்து திறம்பட எதிர்கொள்ள உதவும் உத்திகளையும் உருவாக்கிக் கொள்ள வேண்டும்.

### படிநிலை 11

#### நிரந்தர பதிவு செய்தல்

தொழில்முனைவோர் தனது சொந்த நிறுவனத்தை நிரந்தர பதிவு செய்யப்படும் போது தொழிற்சாலையின் கட்டிடம் தயார் நிலையிலும் முறையான மின்சாரம் பெறுதல், இயந்திரங்களை அமைத்தல் போன்ற பல நடவடிக்கைகளை முடித்தப்பின் மாவட்ட தொழில் மையத்திலிருந்து (DIC's) நிரந்தர பதிவு பெறப்படுகிறது. **விண்ணப்பம் பெற்ற 7 நாட்களுக்குள்** மாவட்ட தொழிற்துறை அலுவலர் அல்லது நியமிக்கப்பட்ட பிற அலுவலர் நிறுவனத்தை ஆய்வு செய்வதற்கான தேதி மற்றும் நேரத்தையும் குறிப்பிடுவார் ஆய்வின் போது நிறுவனத்தில் அமைந்துள்ள அனைத்துப் பொருட்களின் மதிப்பீடும் இதில் அடங்கும். தொழிற்சாலை உற்பத்திக்கான திறனை நிரூபிக்கும் போது, தொழிற்துறை இயக்குனரால் ஒரு நிரந்தர பதிவு சான்றிதழ் வழங்கப்படும். அவரிடம் நிரந்தர பதிவிற்கு தொழில் முனைவோர் பல்வேறு ஆவணங்களான நகராட்சி உரிமம், பரிந்துரைக்கப்பட்ட படிவத்தின் விண்ணப்பம், வாடகை ரசீது, அல்லது உரிமையாளரிடமிருந்து ஆட்சேபனை சான்றிதழ், வாங்கிய ஒவ்வொரு பொருட்களின் விற்பனை ரசீது நகல்கள், உறுதி மொழி பத்திரம் போன்றவற்றை சமர்ப்பிக்க வேண்டும்.

### படிநிலை 12

#### இலாபத்தை அதிகரித்தல் மற்றும் கடனை திருப்பிச் செலுத்துதல்

உற்பத்தி செலவு மற்றும் இலாப அதிகரித்தல் பற்றி தொழில்முனைவோர் எப்போதும் விழிப்புடன் இருக்க வேண்டும். இலாபம் அதிகரிக்காவிட்டால் அவர்கள் அதற்குரிய காரணங்களை கண்டுபிடித்து செலவுகளை குறைத்து, உற்பத்தி திறனை சரி செய்ய முயற்சிக்க வேண்டும். செலவீனங்களை குறைக்க பல நடவடிக்கைகளை மேற்கொண்டு உற்பத்தி கழிவுகளை குறைக்க முயற்சி செய்ய வேண்டும். மாதத்திற்கு ஒரு முறை மொத்த


XII Std - Home Science TM_Unit 7.indd 216 20-04-2020 6.26.48 PM

விற்பனை செய்ய வருவாயை கணக்கிடுவதன் மூலம் ஒரு மாதத்திற்கு கிடைக்கும் இலாபத்தை விளக்கமாக தெரிந்து கொண்டு அவற்றை அதிகரிக்க மற்றும் பராமரிக்க வேண்டும். ஆண்டின் இறுதியில் முதலீட்டின் மீதான வருவாய் மற்றும் விற்பனையின் இலாப விகிதங்களைக் கணக்கிடுவதன் மூலம் இலாபத்தை பற்றி தெரிந்து கொள்ளலாம்.

**செயல்பாடு – 1**

ஒரு நிறுவனத்தை நிறுவ சந்திக்க சமீபத்தில் நிறுவனத்தை நிறுவிய ஒரு தொழில்முனைவோரை சந்தித்து நிறுவனத்தை நிறுவுவதில் எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் குறித்து விவாதிக்கவும்

கடன் தொகையை திருப்பிச் செலுத்துவது தொடர்பான திட்டங்களை வைத்திருக்க தொழில் முனைவோர் தயாராக இருக்க வேண்டும். பொதுவாக வங்கிகளும், நிதி நிறுவனங்களும் அவர்கள் வகுக்கப்பட்ட அட்டவணையின் படி கடன் வாங்குபவர் அசலுடன், வட்டிகளையும் திருப்பி செலுத்த வேண்டும் என்று வலியுறுத்துகின்றன. கடன் செலுத்தும் அசல் மற்றும் வட்டித் தொகை ***12* முதல் *24*** மாதங்கள் வரை மாறுபடும். இவற்றை பல தவணைகளாக செலுத்துவதற்கு அனுமதிக்கப்படுகிறது.

இந்த இரண்டு நிலைகளிலும் அதாவது தொடக்க நிலை மற்றும் செயல்பாட்டு நிலைகளில்முன்னெச்சரிக்கைநடவடிக்கைகள் எடுத்துவிட்டால் தொழில் முனைவோர், சந்தையில் தங்களுடைய பொருட்களை தக்க வைத்துக் கொள்ளும் போது இவர் மிகுந்த வெற்றிகரமானவராகவும் விரும்பிய இலக்கை அடையக் கூடியவராகவும் இருப்பார்.

### 7.4.3 தொழில் முனைவை பாதிக்கும் சுற்றுச் சூழல் காரணிகள்

**தொழில் முனைவோர் வளர்ச்சியைத் தடுக்கும் சுற்றுச் சூழல் காரணிகள்** கீழே கொடுக்கப்பட்டுள்ளன. அவைகள்

1. அரசாங்கக் கொள்கையில் திடீர் மாற்றம்.
2. திடீர் அரசியலில் எழுச்சி.
3. போர் அல்லது அரசுகளுக்கு இடையேயான மோதல்கள்.
4. உறுதியற்ற தன்மையுள்ள அரசியல், அல்லது நிறுவனத்திற்கு விரோதமான அரசின் அணுகுமுறை.
5. அரசு நிறுவனங்களின் அதிகப்படியான லஞ்சம் மற்றும் ஊழல்.
6. கருத்தியல் மற்றும் சமூக மோதல்கள்.
7. நம்பகத் தன்மையற்ற ஆற்றல், பொருட்கள், நிதி, உழைப்பு மற்றும் பிற உள்ளீடுகளின் விநியோகம்.
8. வியாபாரத்தில் உள்ள உள்ளீடுகளின் செலவுகளை அதிகரிப்பது.
9. சாதகமற்ற சந்தைகளின் ஏற்ற இறக்கங்கள்.
10. வங்கிகள் மற்றும் நிதிநிறுவனங்களின் சாதகமில்லாத அணுகுமுறை.

### 7.4.4 பொருளாதார வளர்ச்சியில் தொழில்முனைவோர் வகிக்கும் முக்கிய பங்கு

தொழில் முனைவோர் பொதுமக்களின் செயலற்ற சேமிப்பை அணிதிரட்டுவதன் மூலம் மூலதன உருவாக்கத்தை ஊக்குவிக்கிறது.

- இது உடனடி பெரிய அளவிலான வேலைவாய்ப்பை வழங்குகிறது. இதனால், இது நாட்டின் வேலையின்மை பிரச்சினையை குறைக்க உதவுகிறது, அதாவது, அனைத்து சமூக-பொருளாதார சிக்கல்களின் மூலமும்.
- இது சீரான பிராந்திய வளர்ச்சியை ஊக்குவிக்கிறது.
- இது பொருளாதார சக்தியின் செறிவைக் குறைக்க உதவுகிறது.
- ஒரு நாட்டின் நலனுக்காக நீதி வருமானம் மற்றும் அரசியல் அதிகாரத்தை சமமாக மறு பகிர்வு செய்வதை தூண்டுகிறது.
- இது பயன்படுத்தப்படாத செயலற்றதாக இருக்கும் வளங்களை மூலதனத்தை திறன்



XII Std - Home Science TM_Unit 7.indd 217 20-04-2020 6.26.48 PM

ஆகியவற்றை திறம்பட ஒருமுகப்படுத்தி ஊக்குவிக்கிறது.

- இது நாட்டின் பொருளாதார வளர்ச்சி செயல்பாட்டின் அனைத்து இணைப்புகளையும் தூண்டுகிறது.

### தொழில்முனைவோர் பிறக்கிறார்களா அல்லது உருவாக்கப்படுகிறார்களா?

தொழில்முனைவோர் விளையாட்டு வீரர்களைப் போன்றவர்கள் அல்ல, அவர்களுக்கு இயல்பான உள்ளார்ந்த உடல் மற்றும் தசைகள் தேவையில்லை. ஒரு விளையாட்டு வீரரின் குழந்தை ஒரு விளையாட்டு வீரராக வளரக்கூடும், அதுபோல் ஒரு தொழில்முனைவோரின் குடும்பத்திலும் இயலும். இருப்பினும் தொழில்முனைவோர் உருவாக்கப்படுகிறார்கள், மேலும் அவர்களுக்கு சில சிறப்பு குணங்கள் உள்ளன. விளையாட்டு வீரர்களைப்போல பயிற்சிகள் மற்றும் அனுபவங்கள் தேவை. பல தொழில் முனைவோர் அல்லாத குடும்பங்கள் சொந்தத் தொழிலைத் தொடங்கி ஒவ்வொரு நாளும் தொழில்முனைவோராக மாறுகிறார்கள்.

## 7.5 குடிசைத் தொழில் மூலம் தயாரிக்கப்படும் பாரம்பரிய உணவுகள்

MWRHTA

குடிசைத் தொழில் நாட்டின் கலாச்சார பாரம்பரியத்தை பாதுகாக்க உதவுகிறது. குடிசைத் தொழில் மூலம் தயாரிக்கப்பட்ட பொருட்கள் திறமைகளின் அடிப்படையில் உற்பத்தி செய்யப்படுகின்றன. இத்தகைய பொருட்களை தயாரிப்பதற்கான திறமைகள் குடும்பத்தின் பாரம்பரிய முறைகளின் அடிப்படையில் அமைந்துள்ளது. இந்த பொருட்கள் அனைத்தும் சொந்தமானதாகவும், தனித்தன்மை மிக்கதாகவும், இந்திய கலாச்சாரத் தோற்றத்தை உடையதாகவும் காணப்படுகின்றன.

இந்தியாவின் கிராமப்புற பகுதிகளில் உள்ள பல குடும்பங்கள் பொருட்களை தங்கள் வீடுகளிலேயே சிறிய அளவில் தயாரிக்கும் பணியில் ஈடுபடுகின்றன. இவர்களுடைய செயல்பாடுகள் மிக சிறியது, வேலை செய்யும் தொழிலாளர்கள் பொதுவாக குடும்ப உறுப்பினர்களை சார்ந்தவர்களாகவே உள்ளனர். இவர்கள் இயந்திரங்களை மிக அரிதாக மட்டுமே பயன்படுத்துகின்றனர். குடிசைத் தொழிலில் தயாரிக்கும் அனைத்து பொருட்களும் கைகளினால் மட்டுமே தயாரிப்பவைகளாக உள்ளன. உணவு பொருட்களுடன் மற்ற பொருட்களும் தயாரிக்கப்படுகிறது. குடிசைத் தொழிலில் தயாரிக்கப்படும் பொருட்கள் கைவினைப்பொருட்கள், கம்பளிகள், தரைவிரிப்புக்கள், கைத்தறி பொருட்கள், மண்பாண்டங்கள், நகைகள் மற்றும் உணவுப்பொருட்கள் போன்றவை ஆகும். இவை அனைத்தும் தொழிற்சாலை அடிப்படையில்லாமல் வீட்டை மட்டுமே அடிப்படையாகக் கொண்டு, தங்களுடைய திறன்களை பயன்படுத்தி உற்பத்தி மற்றும் சேவைகளின் மூலம் தயாரிக்கப்படும் அனைத்துப் பொருட்களும் குடிசைத் தொழில் ஆகும்.

தமிழ்நாட்டில் உள்ள ஒவ்வொரு மாட்டத்திலும்தங்கள்சொந்ததயாரிப்புக்களின் மூலம் உணவுப் பொருட்களை தனித்துவமாக தயாரிக்கின்றனர். எனவே இது மிகவும் தனித்துவமிக்க உணவாக ஒவ்வொரு மூலையிலும் வெளிப்படுகிறது.



XII Std - Home Science TM_Unit 7.indd 218 20-04-2020 6.26.49 PM

### குடிசைத் தொழிலின் குறிக்கோள் மற்றும் நோக்கங்கள்

குடிசைத் தொழில்கள் பொதுவாக சிறிய அளவிலான வீடுகளில் செய்யும் தொழில்களாகும். இவை உள்ளூர் மக்களின் தேவைகளை பூர்த்தி செய்யக்கூடிய பொருட்களை மட்டுமே உற்பத்தி செய்கின்றன.

### குடிசைத் தொழிலின் முக்கியத்துவம்

- குடிசைத் தொழில்கள் கிராமப்புற பொருளாதரத்தின் முதுகெலும்பாக கருதப்படுகின்றன. அவை கிராமப்புறங்களில் வேலை வாய்ப்பை உருவாக்குகின்றது.
- இத்தொழிலில் பணியாளர்கள் முழு திறமையுடையவர்கள் மற்றும் குறைந்த அளவில் திறமையுடையர்களும் உள்ளனர்.
- இத்தொழில் உள்ளூர் வளங்களை சிறந்த முறையில் பயன்படுத்துகின்றது.
- இந்த தொழில்கள் கிராமப்புறங்களில் வாழும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த உதவுகின்றன.
- இந்த தொழில்கள் பெண்களின் திறமைகளை வெளிப்படுத்த உதவுகின்றது.

### குடிசைத் தொழிலின் பண்புகள்

- பாரம்பரிய திறனை பயன்படுத்துதல்
- சிறிய அளவில் உற்பத்தி செய்தல்
- முறைப்படுத்தப்படாத தொழிற்துறை
- வேலை வாய்ப்புக்களை உருவாக்குதல்
- கலாச்சாரத்தைப் பாதுகாத்தல்
- விவசாய வளங்களை பயன்படுத்துதல்
- சுற்றுச் சூழல் பாதிப்படையாத தொழில்கள்
- செயல்பாடுகளின் சுலபத் தன்மை
- உள்நாட்டு மூலப் பொருட்களை பயன்படுத்துதல்

## 7.5.1 பாரம்பரிய உணவுகள்

- பாரம்பரிய உணவுகள் என்பது பல தலைமுறைகளை கடந்து அல்லது பல தலைமுறைகளால் உண்ணப்படும் உணவு மற்றும் உணவு வகைகள் ஆகும்.
- பாரம்பரிய உணவுகள் மற்றும் இயற்கை உணவுகள் பாரம்பரியமாக இருக்கின்றன. மேலும் இவைகளில் ஒரு வரலாற்று சிறப்புமிக்க முன்னோடியான தேசிய உணவுகள், பிராந்திய உணவுகள் அல்லது உள்ளூர் உணவுகள் ssஉள்ளன.

தமிழ்நாட்டில் 37 மாவட்டங்களும் பல சிறிய கிராமங்களும் உள்ளன ஒவ்வொரு இருப்பிடமும் அதன் சிறப்பான உணவுக்கு பிரபலமானது. அந்தந்த ஊர்மக்கள் தங்கள் கைகளில் மந்திர வித்தை வைத்திருப்பதால் இந்த சமையல் வகைகளை உலகப் பிரசித்தம் ஆக்குகிறது. சில பாரம்பரிய உணவு வகைகளை பார்ப்போம்.

### பாரம்பரிய உணவுகளை தயாரித்தல்

### சென்னை வடகறி



வடகறி என்பது சென்னை உணவகங்களில் மிகவும் பிரபலமான உணவுகளில் ஒன்றாகும். இதனை இட்லி, தோசை மற்றும் சப்பாத்திக்கு ஏற்ற துணை உணவாக பயன்படுத்துகின்றனர். கடலை பருப்பு மாவு, மிளகாய் மற்றும் வெங்காயம் சேர்த்து வடை தயாரிக்கப்படுகிறது. வடகறி கிரேவி தயாரிக்க தேங்காய் பாலை பயன்படுத்துகிறார்கள். இந்த கிரேவியில் வடைகளை சிறிது நேரம் போட்டு அவற்றை சமைக்க வேண்டும். வடகறி என்பது சென்னையின் தெருவோர உணவகங்களில் கிடைக்கக்கூடிய ஒரு பிரபலமான சிறப்பான உணவாகும். செட் தோசை மற்றும் சூடான வடகறி இணைந்து ஓர் அற்புத சுவையான உணவை அளிக்கிறது.



XII Std - Home Science TM_Unit 7.indd 219 20-04-2020 6.26.49 PM

## மதுரை ஜிகர்தண்டா



மதுரையில் பிரபலமான ஒரு குளிர்பானம் ஜிகர்தண்டா ஆகும். இது ஒரு அற்புதமான சுவை கொண்ட பானமாகும். கோடைகாலத்தில் மிகவும் பிரபலமானது. பாதாம் பிசின், காய்ச்சிய பால், ஐஸ்கிரீம் மற்றும் நன்னாரி சிரப் போன்ற பொருட்களை கொண்டு தயாரிக்கப்படுகிறது. ஒரு கண்ணாடி டம்ளரில் பாதாம் பிசின், காய்ச்சிய கெட்டியான பால் மற்றும் நன்னாரி சிரப்பை சேர்த்து நன்றாக கலக்க வேண்டும். அதன்மீது சிறிது ஐஸ் கிரீம் சேர்த்து பரிமாறலாம். ஜிகர்தண்டா சுவையை அதிகரிக்க ஐஸ்கிரீம் பயன்படுத்தப்படுகிறது. கோடை நாட்களில் புத்துணர்ச்சி அளிக்க கூடிய சிறந்த பானமாகும்.

## ஸ்ரீவில்லிபுத்தூர் பால்கோவா



ஸ்ரீவில்லிபுத்தூர் ஆண்டாளின் பிறப்பிடம் ஆகும். இவ்விடத்திற்கு வருகை தரும் மக்கள் சுவையான பால்கோவாவை உண்ணாமல் ஒரு போதும் சென்றதில்லை. விறகுகள் அல்லது முந்திரி ஓடுகளை பயன்படுத்தி எரிக்கப்படும் தீயில் பெரிய மண்பானைகளில் பாலை கொதிக்க வைத்து அது கெட்டியாக மாறும்போது சர்க்கரையை சேர்த்து நன்கு கலக்கப்படுகிறது. இது கெட்டியான பிறகு பரிமாறப்படுகிறது. இதனைத் தயாரிக்க உள்ளூரில் மாடு வைத்திருப்பவர்களிடமிருந்து பால் பெறப்படுகிறது. தற்போது வரை பால்கோவா தயாரிப்பு முறை பாரம்பரிய முறையில் செய்யப்படுகிறது. பால்கோவாவை தயாரிக்க தரமான பொருட்களை பயன்படுத்துவதால் இதன் சுவை தனி சிறப்புடன் இருக்கின்றது.

## கோவில்பட்டி கடலை மிட்டாய்



கோவில்பட்டி மிட்டாய் என்பது வேர்க்கடலையில் இருந்து தயாரிக்கப் படுவதாகும். இது தமிழ்நாடு முழுவதும் பிரபலமானது. தரமான பொருட்களை பயன்படுத்துவதால் மிட்டாயின் சுவை மிகவும் சிறப்பாக கருதப்படுகிறது. வெல்லத்தை பாகு காய்ச்சி அதில் குளுக்கோஸ் வாட்டர், வெண்ணிலா எசன்ஸ் மற்றும் வேர்க்கடலையை சேர்த்து மிட்டாய் தயாரிக்கிறார்கள். வழக்கமான தட்டுகளில் ஊற்றி செவ்வக வடிவத்தில் வெட்டி விற்பனைக்கு அனுப்பப்படுகிறது.

## சாத்தூர் காராசேவு



காரா சேவு உணவுப் பொருட்கள் சாத்தூரில் மிகவும் பிரபலம். இதில் மசாலா மற்றும் பூண்டு போன்றவை சீரான அளவில் இருப்பதால் இதன் சுவை பிரபலமானது காராசேவ் தயாரிப்பதில் கடலை பருப்பு மாவு மிக முக்கிய பொருளாகும் சாத்தூரில் மட்டும் கடலைப் பருப்பு மாவுடன் அரிசி மாவு பயன்படுத்துகிறார்கள் இதனுடன் சீரகம், பெருங்காயத்தூள், மிளகாய்த்தூள் மற்றும் பூண்டு விழுது போன்றவற்றை சேர்த்து துளையிட்ட கரண்டியில் மாவை ஊற்றி மிகநீண்ட இழைகளாகபொரித்தெடுக்கிறார்கள். இந்த காராசேவு மிருதுவாகவும் சுவையாகவும் இருக்கிறது. தயிர் சாதம் மற்றும் காராசேவு இணைந்த உணவு மிகவும் சுவையானது.

## நாஞ்சில் நாடு மீன் குழம்பு



நாஞ்சில் நாடு கன்னியாகுமரி மற்றும் நாகர்கோவில் மாவட்டங்களை உள்ளடக்கியது. இவ்விடங்கள் கடற்கரைக்கு அருகில் இருப்பதால் கடல் உணவுகள் இங்கு மிகவும்



XII Std - Home Science TM_Unit 7.indd 220 20-04-2020 6.26.49 PM

பிரபலம். மீன் குழம்பை தயாரிக்க மக்கள் தேங்காய் விழுதை பயன்படுத்துகிறார்கள். இது இவ்விடத்தின் மீன் குழம்பின் பிரபலமாகும். மீன் மசாலாக்களில் மீன் ஊர வைக்கப்படுவதால் ஒரு தனித்துவமான சுவையை அளிக்கிறது. தேங்காய் எண்ணெய் சேர்க்கப்படுவதால் இதன் மனம் உண்ணத் தூண்டுவதாக உள்ளது. அரிசி சாதத்துடன் நாஞ்சில் நாடு மீன் கறி குழம்பு சிறந்த சுவையான உணவு.

### காஞ்சிபுரம் இட்லி



இட்லி என்பது தமிழக மக்களுக்கு வழக்கமான நடைமுறைகளில் உள்ள ஒரு உணவாகும். காஞ்சிபுரம் இட்லி அல்லது கோவில் இட்லி வழக்கமான இட்லியின் செயல்முறைகளில் இருந்து வேறுபட்டதாகும். காஞ்சிபுரத்தில் உள்ள வரதராஜ பெருமாள் கோவிலில் புனித உணவாக வழங்கப்படுகிறது. அரிசி, உளுத்தம் பருப்பு மற்றும் வெந்தயம் ஆகியன சேர்த்து ஊறவைத்து அரைத்த இந்த மாவுடன் மிளகு, சீரகம் மற்றும் இஞ்சி ஆகியன சேர்த்து இட்லி தயார் செய்யப்படுகிறது. மாவை மந்தாரை இலைகளில் ஊற்றி சமைப்பதினால் ஒரு தனித்தன்மையான சுவையை பெறுகிறது. இது ஒரு ஆரோக்கியமான உணவாக கருதப்படுகிறது.

### பாரம்பரிய உணவுகளை உண்பதனால் ஏற்படும் நன்மைகள்:

| | | |
|---|---|---|
| **குறைவான கலோரி** | – | உடல் எடை பராமரிக்க |
| **குறைவான திடக் கொழுப்பு** | – | இருதயத்திற்கு நன்மை தரும் |
| **சதைப்பற்றுள்ள இறைச்சிப் புரதம்** | – | உடல் ஆரோக்கியம் பராமரிக்க |
| **அதிக இரும்புச்சத்து** | – | தசை மற்றும் ரத்த உற்பத்திக்கு தேவைப்படுவது |
| **அதிக துத்தநாகம்** | – | காயங்களை குணப்படுத்தவும் நோயிலிருந்து விடுபடவும் தேவைப்படுகிறது |
| **அதிக உயிர்ச்சத்து A** | – | கண் பார்வை மற்றும் நோயிலிருந்து விடுபட தேவைப்படுகிறது |
| **அதிக கால்சியம்** | – | உறுதியான எலும்புகள் மற்றும் பற்களுக்கு தேவைப்படுகிறது |

கலாச்சார திறன் மற்றும் நல்வாழ்வை வலுப்படுத்துகிறது.

### செயல்பாடு – 2

எந்த இரண்டு பாரம்பரிய உணவுகளுக்கும் செய்முறையை சேகரிக்கவும். நீங்கள் தயாரித்த பொருளின் விலையைத் தயாரித்து கணக்கிடுங்கள். அதே தயாரிப்புகளின் விற்பனை விலையை உங்கள் விலையுடன் ஒப்பிடுங்கள். பொருத்தமான சந்தையில் விற்பனை செய்வதன் மூலம் லாபத்தின் சதவீதத்தை பகுப்பாய்வு செய்து முன்வைக்கவும்.

### பாடசுருக்கம்

தொழில் முனைவு நாட்டின் சமூக மற்றும் பொருளாதார வளர்ச்சிக்கு முக்கிய பங்களிக்கிறது. இது மக்களை சுய சார்புடையவராக ஆக்குகிறது. ஒரு தொழில்முனைவோர் இலாபத்தை சம்பாதிக்க திட்டமிடப்பட்ட முறையில் நிறுவனத்தை நிறுவவேண்டும். சிறிய நிறுவனங்கள் உள்ளூர் வளங்களை பயன்படுத்தி இயக்கப்படுகின்றன. சிறிய தொழிற்துறைகளின் செயல்பாட்டுக்கு இயந்திரங்கள், வளங்கள் ,பணம் மற்றும் பயிற்சிகள் அதிகம் தேவைப்படாது. இலாபம் மற்றும் இலாப விகிதம் சிறிய நிறுவனத்தில் குறைவாகவே உள்ளது.தொழில்நுட்ப உத்திகள் வியாபாரம், வேலைசெய்யும் இடம், விருப்பம், சொந்த தொழில் போன்ற பல அடிப்படைகளில் நிறுவனமானது வகைப்படுத்தப்பட்டுள்ளது.

கவனமாக திட்டமிடுதல், முன் கணிப்பு, தொடர்ந்த செயல் நோக்கம், மற்றும் விடாமுயற்சி ஆகியவை வெற்றிகரமான தொழில் முயற்சியை உறுதிப்படுத்தும் முக்கிய காரணிகளாக உள்ளன. மேலும் தொழில் முனைவோர் சந்தையில் தங்களைத் தக்க வைத்துக் கொள்ளவும், விரும்பிய இலக்கை அடையவும் முயற்சி செய்ய வேண்டும்.

## A-Z கலைச்சொற்கள்

- **தகுதி (Aptitude):** தொழில்முனைவோர் தகுதி என்பது நிறுவன மேலாண்மை தொடர்பான புதிய திறன்களை அறிந்து கொள்வதாகும்.
- **பயனாளிகள் (Beneficiary):** ஒரு நபர் அல்லது குழுவினர்கள் நிறுவனங்களிலிருந்து நன்மைகளை பெறுபவர்கள் ஆவார்.
- **நிறுவனம் (Enterprise):** வாடிக்கையாளர்கள் வாங்குபவர்கள், மற்றும் பயனாளிகளுக்கு சேவை செய்ய குறிப்பிட்ட இலக்குகளை அடைய ஒரு நன்கு வடிவமைக்கப்பட்ட மற்றும் நிறுவப்பட்ட அமைப்பாகும்.
- **செயலாக்கம் (Feasibility):** குறிப்பிடத்தக்க நிறுவன யோசனையுடனான தொடர்பு, தகுதி மற்றும் தரம் குறித்த முறையான விசாரணையாகும்.
- **நிறுவனம் (Firm):** வியாபாரம் அல்லது நிறுவனமானது நகரத்திற்கு உட்பட்ட பொறுப்பான நிறுவனம் அல்லது கூட்டுத் தொழிலில் இலாபத்தைச் சம்பாதிக்கும் பொருட்கள் அல்லது சேவைகளை செய்யும் தொழில்கள் நிறுவனத்தில் செய்யப்படுகிறது.
- **இலாபம் (Profit):** இது சட்டபூர்வ வழிமுறை மூலம் தொழில் முனைவோர் நடவடிக்கைகளில் இருந்து நிகர ஆதாயத்தை வெளிப்படுத்துவதாகும்.
- **வேலைசெய்யும் மூலதனம் (Working Capital):** இது நிறுவனத்தில் தினசரி நடவடிக்கைகளில் முதலீடு செய்ய வேண்டிய பணமாகும்.
- **உத்திகள் (Techniques):** இது ஒரு அறிவியல் முறையாகும். நடைமுறை, செயல்பாடு மற்றும் நிறுவனங்களின் மதிப்பீடு ஆகியவற்றில் பயன்படுத்தப்படும் முறைகளே ஆகும்.

ZTDCI6

## மதிப்பீடு

**I. சரியான விடையை தேர்ந்தெடுத்து எழுதுக.**

**1 மதிப்பெண்**

1. தொழில் முனைவோர் என்ற வார்த்தை ________________லிருந்து பெறப்பட்டது
   அ) ஆங்கிலம் ஆ) இத்தாலி
   இ) ஜெர்மனி ஈ) பிரெஞ்ச்
2. தொழிலாளர் பணியகம் (Labour Bureau) 2015 - 2016 - ல் வேலையின்மை விகிதம் அதிகமாக இருப்பதாக கூறியது.
   அ) 4 % ஆ) 5 %
   இ) 6 % ஈ) 7 %
3. மேலாண்மை கொள்கையின் தந்தை
   அ) ஹென்றி போயல்
   ஆ) ஹிக்கின்ஸ்
   இ) A.H. கோல்
   ஈ) ஜோசப் ஸ்கம்பீட்டர்
4. தொழில் முனைவோரால் ஆய்வு செய்யும் கடைசி மேலாண்மை செயல்பாடு
   அ) ஒருங்கிணைதல்
   ஆ) கட்டுப்படுத்துதல்
   இ) திட்டமிடுதல்
   ஈ) செயல்படுத்துதல்
5. இருப்பு நிலை குறிப்பு என்பது
   அ) வணிக அறிக்கை
   ஆ) வரவு செலவு அறிக்கை
   இ) நிலை அறிக்கை
   ஈ) ஆண்டு அறிக்கை
6. உலக தொழில் முனைவோர் நாள்



XII Std - Home Science TM_Unit 7.indd 222 20-04-2020 6.26.50 PM

அ) ஆகஸ்ட் 2 ஆ) ஆகஸ்ட் 11
இ) ஆகஸ்ட் 21 ஈ) ஆகஸ்ட் 29

7. பெண் தொழில் முனைவோர் தினம்

அ) நவம்பர் 9 ஆ) நவம்பர் 19
இ) நவம்பர் 20 ஈ) நவம்பர் 29

8. கூட்டுக்குடும்ப நிறுவனத்தின் தலைவர்

அ) கர்த்தா
ஆ) ஒப்பந்ததாரர்
இ) தலைமை ஆய்வாளர்
ஈ) கோபர் சென்னர்ஸ்

9. நிரந்தர பதிவு சான்றிதழ் பெறுவது

அ) SSI ஆ) NSIC
இ) DIC ஈ) SIDCO

10. தொழில் முனைவின் வளர்ச்சி பிரச்சினையை குறைக்க உதவுகிறது

அ) பணம் ஆ) வளங்கள்
இ) வேலையின்மை ஈ) வறுமை

## II. சிறுவினாக்களுக்கு விடையளி: 2 மதிப்பெண்கள்

1. தொழில் முனைவு - பொருள் யாவை?
2. தொழில் முனைவு - வரையறை?
3. தொழில் முனைவோர் வரையறை யாது?
4. தொழில் முனைவு மற்றும் தொழில் முனைவோர் இரண்டிற்கும் உள்ள வேறுபாடுகள் யாவை?
5. தொழில் முனைவின் கருத்துக்கள் பற்றி கூறு?
6. சந்தைப்படுத்தல் கலவையில் உள்ள 4Ps மற்றும் 3Ps பற்றி கூறு?
7. கணக்கியல் என்றால் என்ன?
8. இருப்பு நிலை குறிப்பு யாவை?
9. கணக்கியல் என்றால் என்ன?
10. தொழில் முனைவோருக்கு, நிதி உதவி வழங்கும் நிறுவன அமைப்புக்கள் யாவை?
11. குடிசைத் தொழிலின் நோக்கம் என்ன?
12. பாரம்பரிய உணவு பற்றி கூறு?

## III. குறுவினாக்களுக்கு விடையளி 3 மதிப்பெண்கள்

1. பெண் தொழில் முனைவோர் பற்றி எழுது?
2. நிறுவனத்தின் வகைகள் பற்றி கூறு?
3. தொழில் முனைவோர் உருவாகின்றனர் பிறக்கவில்லை - விவாதிக்கவும்.
4. தொழில் முனைவோர் வளர்ச்சியைத் பாதிக்கும் சுற்றுச்சூழல் காரணிகள் யாவை?
5. குடிசைத் தொழில் என்றால் என்ன உதாரணத்துடன் கூறவும்.
6. குடிசைத் தொழிலின் பண்புகள் யாவை?
7. குடிசைத் தொழிலின் முக்கியத்துவம் பற்றி கூறு?

## IV. விரிவான விடையளி 5 மதிப்பெண்கள்

1. தொழில் முனைவின் - முக்கியத்துவம் பற்றி விவரி?
2. நிக்கில் என்பவர் ஒரு வெற்றி பெற்ற தொழில் முனைவோராவார். அவர் எந்தெந்த பணிகளை மேற்கொண்டதால் வெற்றி பெற்றார் என்பதை விவாதிக்கவும்.
3. தொழில் முனைவோரின் அடிப்படைப் பண்புகள் பற்றி விவரி?
4. சிறு தொழில் தொடங்குவதற்கான படி நிலைகள் பற்றி விவரிக்கவும்.
5. பொருளாதார வளர்ச்சியில் தொழில் முனைவோர் வகிக்கும் முக்கிய பங்கு பற்றி கூறவும்.
6. பாரம்பரிய உணவுகள் என்றால் என்ன? அவற்றின் பயன்களையும், ஏதேனும் 3 முக்கியமான பாரம்பரிய உணவுகள் பற்றி கூறவும்.



XII Std - Home Science TM_Unit 7.indd 223 20-04-2020 6.26.50 PM

## மேற்கோள் நூல்கள்


1. Paul J., Kumar A.N., Mampilly P.T., Entrepreneurship Development, Himalaya Publishing House, Mumbai (1999).
2. Kumar P., Aggarwal S.P., Business Entrepreneurship and Management, Wisdom Publication, New Delhi (2013).
3. Manjunatha, Goudar A.K., Management and Entrepreneurship University science press, New Delhi. (2011)
4. Sharma K.C., Entrepreneurship Development, Regal publications, New Delhi (2012)
5. Moorthy K.S., Small Scale Industries, Orient Publishing House, New Delhi (2002).
6. Khanka S.S., Entrepreneurial Development, S.S. Chand & Co. Ltd., New Delhi (2002).
7. Sharma V., Veluri S., Surender Y., Entrepreneurship Development and Business Ethics, Professional Book Publishers, Hyderabad (2017).


## இணையச்செயல்பாடு

### தொழில் முனைவு

கண்டுபிடிப்புகள்தான் வெற்றிக்கான வேர். இந்த செயல்பாட்டை செய்வதன் மூலம் மாணவர்கள் சிறு சிறு தொழிலைக் குறித்தான புது புது கருத்துகளைத் தெளிவாக தெரிந்து கொள்ளமுடியும். இந்த செயல்பாடு இவர்களை மேலும் இந்த் துறையில் அறிந்தவர்களாக மாற்றும். அடுத்த பகுதி GST ஆகும்

**படிகள்:**

- URL அல்லது QR குறியீட்டினைப் பயன்படுத்தி இச்செயல்பாட்டிற்கான இணையப்பக்கத்திற்கு செல்க. அங்கு “வளர் ....இன்” எனும் பகுதி திறக்கும்.
- தற்போது ஒரு பக்கம் பலவித தலைப்புகளோடு திறக்கும்.
- இதில் தங்களுக்குத் தேவையான தலைப்புகளைத் தெரிவு செய்யவும்.
- திறக்கும் பக்கம் மற்றவர்களின் வெற்றிக் கதைகள் மற்றும் அவர்களின் வெற்றிக்கான அநேக குறிப்புகள் மற்றும் செய்திகளைக் கொண்டதாக இருக்கும்.
- நீங்கள் உங்களுக்கு பிரியமான வெற்றியாளர்களைத் தேர்வு செய்து உள்ளே செல்லவும். அதிகப் படியாக GST பற்றியும் தகவல்கள் உண்டு.

**URL:**

https://play.google.com/store/apps/details?id=appymaker.jkavin&hl=en

B242_12_HOME_SCI_TM




XII Std - Home Science TM_Unit 7.indd 224 20-04-2020 6.26.50 PM